**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. இந்திராதேவி | அசல் வழக்கு எண். | 56/2019 |
| த/பெ. | - | கிருஷ்ணன் | வா.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

19.09.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. என் பிரமாண பத்திரிக்கையை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வா.சா.1 எனது அக்கா என்றால் சரிதான். வா.சா.1 எனக்காவும் சேர்த்து சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.1 ன் பிரமாண வாக்குமூலத்திற்கும் எனது பிரமாண வாக்குமூலத்திற்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதி என்னுடைய தந்தை என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதியான எனது தந்தை தாவா சொத்துக்களை 1983 மற்றும் 1986 ஆண்டுகளில் விற்றுவிட்டார் என்றால் சரிதான், சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்துவிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் "இந்த செட்டில்மெண்ட் மூலம் கீழ்கண்ட சொத்தை எவ்வித பாராதீனமும் செய்யாமல் அதில் வரும் வருமானத்தை கொண்டு நீங்கள் ஜீவித்து வரவேண்டியது இப்போது உங்களுக்கு இருக்கும் ஆண் சந்ததியனருக்கும் இனி பிறப்பிக்கும் ஆண் சந்ததிகளுக்கும் உங்கள் ஆயுளுக்கு பிறகு கீழ்கண்ட சொத்தை சர்வ சுதந்திரமாய் சுத்தவிற்கிரையகளுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்து கொள்ள வேண்டியது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத்து சரியாக தெரியவில்லை. செங்கேணி என்பவருக்கு சொர்ணபாக்கியம், வர்ணமுத்து ஆகிய இரண்டு பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். வர்ணமுத்துவின் ஒரே மகன் தான் என் தந்தை 8 ம் பிரதிவாதி இந்திரகுமாரர் என்றால் சரிதான், என் அப்பாவுடன் பிறந்த பெண் பிள்ளை பெயர் தமயேந்தி. என்அத்தையான தமயேந்தி என்பவருக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதியின் வாரிசு என்பதால் தான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 1983, 1986 ஆண்டு காலங்களில் வாதிகள் அனைவரும் 8 ம் பிரதிவாதியுடன் ஒரே வீட்டில் இருந்து வந்தோம் என்றால் சரிதான். என் அப்பா தாவா சொத்தை 1983, 1986 ஆண்டுகளில் கிரையம் கொடுத்த விவரம்

எங்களுக்கு தெரியும் என்றால் தெரியாது. என் அப்பா தாவா சொத்துக்களை விற்பனை செய்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2015 ம் ஆண்டில் தெரிய வந்தது. தாவா சொத்துக்களை 2015 ஆம் ஆண்டு வரை என் அப்பா அனுபவித்து வந்தாரா என்றால் அனுபவித்து வந்தார். என் அப்பா தாவா சொத்துக்களை அனுபவித்து வந்ததற்கான வருவாய் ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை 8 ம் பிரதிவாதியான என் அப்பா 1983, 1986 ஆண்டுகளில் விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் இருந்து வந்த மகசூல் ஆதாயத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு வரை பிரதிவாதிகள் எங்களுக்கு பங்கு கொடுத்து வந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் அறுவடை செய்து வந்தனர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எந்த அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்து வந்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களை முறையாக கிரையம் பெற்று கடந்த 1986 ம் ஆண்டு முதல் பிரதிவாதிகள் அனுபவித்தில் இருந்து வருகின்றனர் என்றால் சரியல்ல. காலதாமதாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. என் சாட்சியத்தில் பஞ்சாயத்தில் பாகம் பிரிப்பதற்காக பேசப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தையான 8 ம் பிரதிவாதி சரியான மறுபயன் பெற்று தான் கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றும் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எங்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் நாங்கள் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் வழக்கில் முறையான முத்திரை கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.